தமிழ்நாடு தகவல் ஆணையம்
எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), தேனாம்பேட்டை,
சென்னை – 600 018. தொலைபேசி எண். 044–*24347590*.

**<u>ஆணை எண்.SA8201/A/2017</u>** **<u>நாள் :19.09.2019</u>**

# திரு. இரா. தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி. எல்., மாநில தகவல் ஆணையர்

***

## <u>ஆணை</u>

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளரின் பெயர் | திருமதி. ப. இராமலட்சுமி, |
| தகவல் பெறும் உரிமைச் சட்டபிரிவு 6(1)ன் கீழ் மனு செய்த நாள் | 13.02.2017 |
| பொதுத்தகவல் அலுவலர் | பொதுத்தகவல் அலுவலர்/<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>அருப்புக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| முதல் மேல்முறையீட்டு மனு 19(1)ன் கீழ் மனு செய்த நாள் | 22.02.2017 |
| மேல்முறையீட்டு அலுவலர் | மேல்முறையீட்டு அலுவலர்/<br>வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>அருப்புக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| மனுதாரர் ஆணையத்திற்கு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் மனு செய்த நாள் | 27.03.2017 |

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த தனது மனுவிற்கு எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்துள்ளார். பிரிவு 7(1)ன் மீது பொதுத் தகவல் அலுவலரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. இந்த பிரிவின்படி, மனு பெற்ற 30 நாட்களுக்குள் மனுதாரர் கோரிய தகவல் வழங்கப்பட வேண்டும் அல்லது பிரிவு 8 அல்லது 9ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக வேண்டுகோள் நிராகரிக்கப்பட வேண்டும்.

3. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு ஏற்கனவே பதில் அனுப்பியுள்ளாரா என்பதை ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும். அப்படியெனில், அதன் நகல் ஒன்றினையும் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4. மனுதாரருக்கு இதுவரை பதில் அனுப்பப்படவில்லையெனில், பொதுத் தகவல் அலுவலர் கீழ்க்கண்ட படிவத்தில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து பதிலை அனுப்ப வேண்டும் :–

| வினா / கோரிக்கை எண் | பதில் |
|---|---|
| | |
| | |
| | |

5. ‘பதில்’ என்ற காலத்தில் ஒவ்வொரு கேள்வி / கோரிக்கை எண்ணுக்கும் கீழ்க்கண்டவற்றை குறிப்பிட வேண்டும் :

தகவல் வழங்கப்படுகிறது எனில் :

(i) வழங்கப்படும் தகவலின் தன்மை

(ii) வழங்கப்படும் ஆவணத்தின் விவரங்கள்

தகவல் மறுக்கப்படுகிறது எனில் :

(i) மறுப்பதற்கான காரணம் / நியாயம்

(ii) மறுப்பதற்கான தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு அல்லது சட்டப்படியான முன்நிகழ்வு / மேற்கோள்

6. மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாது எனில் அதற்கான காரணம், தகவல் பெறும் உரிமைச் சட்ட சம்பந்தப்பட்ட பிரிவின் கீழ் இந்த தகவல் வழங்குவது எவ்வாறு விலக்களிக்கப்படுகிறது என்ற விவரத்துடன் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். சட்டப் பிரிவினை மட்டும் குறிப்பிடுவது போதாது. இந்த சட்டப் பிரிவு எவ்வாறு பொருந்துகிறது என்பதும் விளக்கப்பட வேண்டும். மனுதாரருக்கு அனுப்பிய பதிலின் நகல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 7(1)ல் குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல் கொடுக்கப்படவில்லை எனில் தகவல் தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்பட வேண்டும்.

8. பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைக்கும் பதிலில் கீழ்க்கண்டவற்றை குறிப்பிட வேண்டும் :–

(i) பொதுத் தகவல் அலுவலரின் பெயர்

(ii) மனுதாரர் மேல்முறையீடு செய்ய விரும்பினால் அதற்கு ஏதுவாக மேல்முறையீட்டு அலுவலரின் விவரங்கள், அதாவது பெயர், பதவி மற்றும் முகவரி

9. இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் பதில் / தகவல் / ஆவணங்கள் மேல்முறையீட்டாளருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் (RPAD) அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

10. பதிலின் நகல் மற்றும் **RPAD**ல் அனுப்பப்பட்டதற்கான சான்று ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

11. இந்த உத்திரவினை செயல்படுத்த தவறும் பட்சத்தில் பிரிவுகள் 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் நடவடிக்கைக்கு உட்பட நேரிடும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையர்**

/ஆணைப்படி/

உதவிப் பதிவாளர்

**பெறுநர்**

பொதுத்தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை வட்டம்,
விருதுநகர் மாவட்டம். (இ)

**நகல்**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
அருப்புக்கோட்டை வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி. ப. இராமலட்சுமி, க.பெ. து. பவுன்,
4/156, காமராஜர்புரம் காலனி, சிவகாசி கிழக்கு - 626 189,
சிவகாசி மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளரின் கவனத்திற்கு</u>**

மேல்முறையீட்டாளர் ஏற்கனவே பதில் பெற்றிருந்தாலோ அல்லது இவ்வாணைக்குப் பிறகு பதில் பெற்றிருந்தாலோ அதனை ஆணையத்திற்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் பதில் பெறப்படவில்லை என்றால் அதன் விவரத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 60 நாட்களுக்குள் ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

மேலும் வழங்கப்பட்ட பதிலில் திருப்தியில்லை எனில் எவ்வினங்களில் எந்தவிதத்தில் அது நிறைவானதாக இல்லை என்பதை குறிப்பிட்டு, பெறப்பட்ட பதிலின் நகலை இணைத்து ஆணையத்திற்கு கடிதம் அனுப்பலாம். இவ்விவரங்கள் இவ்வாணை கிடைக்கப் பெற்ற 60 நாட்களுக்குள் தெரிவிக்கப்பட வேண்டும்.

மேல்முறையீட்டாளரிடமிருந்து 60 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப்பெறவில்லை–யென்றால் அவருடைய மேல்முறையீடு ஆணையத்தால் முடித்து வைக்கப்படுவதாக கருதப்படும்.

TG pc 19092019